Deposition of Witness for : PW-1 | Date : 12/10/2023

Case No. : **O.S.** 01/2023 | Nationality : Indian

Name :ஜெயக்குமரன் | Religion :

Father's/Husband's Name : ஜானகிராமன் | Age :55

Village :

Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. நான் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தின் படி தான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் முதல் பக்கத்தில் சர்வே எண், விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல் பக்கத்தில் சர்வே எண் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடம் வெற்றிடமாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தில் எந்த இடத்திலாவது தலைப்பாக பட்டா என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ-1 ஆவணம் சர்வே நோட்டிஸ் என்றால் எனக்கு தெரியவில்லை.

2. தாவா சொத்தில் வீடு உள்ளதா என்றால் வீடு உள்ளது. பழைய வீடா, புது வீடா என்றால் பழைய வீடு ஆகும். முன்னால் பழைய ஓட்டு வீடு, பின்னால் ஆர்.சி.சி ஒட்டு வீடு உள்ளது. பிரதிவாதியின் அனுபவ கோவில் சொத்திற்கும், எனது சொத்திற்கும் இடையே காம்பவுண்ட் சுவரும், அதன் நடுவில் ஒரு இரும்பு கிரில் கேட் உள்ளது என்றால் சரிதான். முன்னால் உள்ள பழைய ஓட்டு வீடு எத்தனை வருடங்கள் பழைமையானது என்றால் சுமார் 60 வருடங்கள் பழைமையானது. பின்னால் உள்ள ஆர்.சி.சி ஒட்டு வீடு சுமார் 40 வருடங்கள் பழைமையானது. பின்னால் உள்ள ஆர்.சி.சி ஒட்டு வீடு சுமார் 40 வருடங்கள் பழைமையானது அல்ல என்றாலும், என்னால் தற்போது தான் கட்டப்பட்டது என்றாலும்

சரியல்ல.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள பெயர் எனது அப்பா ஜானகிராமன் பெயராகும். எனது அப்பா ஜானகிராமன் யாரிடமிருந்தாவது தாவா சொத்தினை கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தாவா சொத்தினை யாரிடமிருந்தும் கிரையம் வாங்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தில் தாவா சொத்து எனது அப்பாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் இவ்வழக்கினை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.1 சர்வே நோட்டிசின் படி சொத்தினை அளந்தார்களா, எனது அப்பாவிற்கு பட்டா கொடுக்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1996 ம் வருடம் சொத்தினை அளந்தார்கள். அவ்வாறு 1996 ம் வருடம் சொத்தினை அளந்தார்கள் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ-1 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். 1996 ம் ஆண்டில் சொத்து அளவீடு செய்யப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1996 ம் வருடம் எனது தகப்பனார் பெயரில் பட்டா ஏதும் கொடுக்கப்பட்டதா என்றால் வா.சா.ஆ.1 ஆவணம் தான் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா-ஆ.1 ஆவணத்தை தவிர 1996 ம் ஆண்டு எனது தகப்பனார் பெயரில் வேறு ஆவணம் எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ-2 பாகப்பாத்திய விடுதலைபத்திரம் எங்கள் குடும்பத்திற்குள் எங்கள் குடும்ப உறுப்பினர்களால் செய்து கொள்ளப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ-2 ஆவணத்தில் வா.சா.ஆ-1 ஆவணத்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா அல்லது

இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ-1 ஆவணத்தை இணைத்தால் வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்ய முடியாது என்பதால் அதனை மறைத்து ஆவணத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா மற்றும் அடங்கலில் அதன் நகலை மனு கொடுத்து பெற்றதற்கான ந.க எண் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

6. வா.சா.ஆ.2 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டா மாறுதல் உத்தரவில் எனது தகப்பனார் ஜானகிராமன் பெயரில் இருந்த ஏதேனும் கிரையப்பத்திரன் பேரில் பட்டா மாறுதல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்துடன் எனது தகப்பனார் பெயரில் இருந்த பட்டா ஏதும் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சிட்டா, அடங்கல் மற்றும் பட்டா மாறுதல் உத்தரவின் அடிப்படையில் எனது குடும்ப உறுப்பினர்களால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து 1996 ம் ஆண்டிற்கு முன்பு எனது தகப்பனார் பெயரில் இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. தாவா சொத்தின் விஸ்தீரணம் 5 1/2 ஏர்ஸ் என்றால் சரிதான். அந்த 5 1/2 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ள சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டுவதற்கு கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து சான்று பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ-3 வீட்டு வரி ரசீதுகளில் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-4 மின் கட்டண ரசீதுகளில் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-5 குடிநீர் கட்டண ரசீதுகளில் கோவிந்த ஐயர் பெயரில் ஏற்பட்டுள்ள குடிநீர் கட்டண ரசீதுகள் இணைக்கப்பட்டுள்ளது என்றால் எனது தாத்தா பெயரில் உள்ள குடிநீர் கட்டண ரசீதுகள் தவறாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.6 புகார் அளிக்கப்பட்டதற்கு காவல் நிலையத்தில் மனு ரசீது எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.6 புகார் மனுவில் மேலே உள்ள தேதியில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் அளித்த புகார் மனுவில் திருத்தம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் 10/12/2022 ம் தேதி புகார் அளித்தேன். புகாரின் பேரில் போலிசார் என்னை மட்டும் அழைத்து விசாரித்தார்களா அல்லது பிரதிவாதிகளையும் அழைத்து விசாரித்தார்களா என்றால் இருவரையும் அழைத்து விசாரித்தார்கள். காவல் துறையினரால் என்ன முடிவு சொல்லப்பட்டது என்றால் சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும் படி சொல்லிவிட்டார்கள். அதனை எழுத்து மூலமாக கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் கொடுத்த புகார் மனுவே தவறு என்றாலும், போலிசார் பிரதிவாதிகளை அழைத்து விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.